**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதறக் ான அதன் ஆறற் லினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதுசந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாகஅபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாகஎன்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன்ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டுபயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய கணக்காய்வு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறிப்பு இலக்கம் 3.4 இன் பிரகாரம், பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் குறித்த பாடநெறிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள சதவீதத்தினை அடிப்படையாக கொண்டு வருமானம் மற்றும் செலவினம் இனங்காணப்பட்டு, கணக்கு வைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், ரூபா 32,514,729 தொகையான பாடநெறிக் கட்டண வருமானம் மற்றும் ரூபா 34,387,050 தொகையான பாடநெறிச் செலவினம் தொடர்பில் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 27 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நியாயமானதாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24 ஆம் அத்தியாயத்தின் பிராகரம் இறுதிக் கணக்குகள் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஒரே முறையில் தயாரிக்கப்பட்டால் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டையும் உள்ளடக்கி இறுதிக் கணக்கு நிரல் முறைமையின் அடிப்படையில் தயாரிக்க முடியும். எனினும், எமது நிறுவனத்தினால் அட்டுறு அடிப்படையில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றமையால் பல வருடங்களாக வரவு செலவுத்திட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராமையால் திறைசேரியிலிருந்து வழங்கப்படும் பணத்திலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினங்களுக்காக இறுதிக் கணக்கொன்று தயாரித்தல் மாத்திரமே இதுவரையிலும் இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் திறைசேரியிலிருந்து கிடைக்கும் பணத்திற்காக மற்றும் அதன் செலவினங்களுக்காக தனியானதொரு இறுதிக் கணக்கொன்று அட்டுறு அடிப்படையிலிருந்து விலகி (காசு அடிப்படையில்) கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் தரச் சான்றுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 607,600 தொகைான மடி கணினிகள், ஆதனங்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், ஆண்டிற்கான தர | இந்த இரு மடி கணினிகளும் மீளாய்வாண்டின் திசெம்பர் 29 ஆந் திகதியே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தரச் சான்றுபடுத்தல் வரவு செலவுத்திட்ட அறிக்கையில் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் | சொத்துக்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்றுபடுத்தல் (Quality Assurance) செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையால், மீளாய்வாண்டின் செலவினம் அந்த அளவினால் அதிகரித்தும், சொத்துக்களின் பெறுமதி அந்த பெறுமதியால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறப்பட்டுள்ளமையால், குறித்த செலவின தரச் சான்றுபடுத்தல் நிலையத்தின் (Center of Quality Assurance) கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது இது சொத்தொன்றாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டு கணக்காய்வு திகதியிலிருந்து பெறுமானத் தேய்வினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | |
| (ஆ) | பாடநெறி வருமானத்தில் 20 சதவீதம் தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அளவினை விட அதிகமாக மற்றும் குறைவாக காசு செலவு வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 22,752,082 தொகையான 12 பாடநெறிகளிலிருந்து எதுவித பணமும் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 8,012,324 தொகை தவறானது என்பது அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் போது ரூபா 8,012,324 ஆன தொகை மாத்திரமே நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய பாடநெறிகளுக்கு உரிய பணம் முதலாவது தவணை பரீட்சையின் பின்னர் பாடநெறிகளுக்குரிய வரவு செலவுத்திட்ட மதிப்பீடு திருத்தப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்ட பாடநெறி மதிப்பீடுகளின் ஊடாக நிதியத்திற்கு வழங்கப்படும். நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள் சமூக சேவைகள் கல்லூரியின் மற்றும் பயிற்சிப் பிரிவின் ஊடாகவே நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு பாடநெறிகளுக்குரிய நிறுவனக் கட்டண உறுதிச்சீட்டுகள் இந்த இரு பிரிவுகளின ஊடாக கணக்குப் பிரிவிற்கு கிடைத்த பின்னர் நிதியத்திற்கு அந்த பணம் செலவு வைக்கப்படும். அதன் பிரகாரம் உறுதிச்சீட்டுகள் கிடைக்கும் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது உரிய முறையில் உறுதிச்சீட்டுகளை வழங்குமாறு குறித்த பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டது என்பது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்தம் சமூகப் பணிகள் பட்டப் பாடநெறிக்கான மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்களுக்கு அரசாங்கத்திலிருந்து பெற வேண்டிய பணம் மற்றும் வருடாந்தம் மாணவர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை | சமூகப் பணிகள் பட்டப் பாடநெறிக்காக அரசாங்கத்திலிருந்து கிடைத்துள்ள மஹாபொல புலமைப்பரிசில் பணம் முறையே கடந்த வருடத்தில் ரூபா 1,203,800 மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 384,850 ஆக | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்காத காரணத்தால் கடந்த வருடத்தில் புலமைப்பரிசில்தாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,203,800 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 384,850 ஆன தொகை குறித்த வருடத்தின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | காணப்படுவதுடன், கடந்த வருடத்தில் ரூபா 963,200 மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 356,900 ஆன தொகை பலுமைப்பரிசில்தாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணம் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டு திருத்துவதற்கும் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்க அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது. | |
| (ஈ) | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 2,387,043 தொகையான மீண்டெழும் செலவுகள் நிலையான சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களின் மதிப்பு அந்தத் தொகையால் மிகைப்படுத்தப்பட்டதுடன் செலவுகள் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. | நிலையான சொத்துக்களை பழுதுபார்ப்பதற்காக கால அடிப்படையில் திறைசேரியிலிருந்து வழங்கப்படும் மீண்டெழும் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் செலவினம் 2016 முதல் 2021 வரையிலான நிலையான சொத்துக்கள் குறிப்புகள் மூலம் (Rehabilitation) காண்பிக்கப்பட்டுள்ளது. (LKAS 16 இன் படி) கடந்த வருடத்தில் எந்த மூலதனச் செலவும் வழங்கப்படவில்லை என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 15,795,278 தொகையான கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கடந்த வருடங்களில் கணினி உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், கணினி உதிரிப்பாகங்களுக்கு தனியானதொரு கணக்கொன்று பராமரிக்கப்படவில்லை. கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டின் போது கணினி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக தனியானதொரு கணக்கினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது மாணவர் உதவிதொகைச் செலவினத்தினுள் கல்விச் சுற்றுலாவிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 326,000 தொகையும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆண்டின் மாணவர் உதவுத் தொகைச் செலவினம் அந்த அளவினால் அதிகரித்துக் | இந்த இரண்டு செலவுகளும் இளங்கலை சமூகப் பணி பட்டப்படிப்புக்காகச் செய்யப்படுகின்ற செலவினம் என்பதால் நிதிக்கூற்றுக்களில் BSW-Bursary என ஒரு செலவாகக் காட்டப்பட்டுள்ளது. ரூபா 326,000/- கல்விச் சுற்றுலாவிற்காக | பரிவர்த்தனைகள் சரியாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் உதவித்தொகை செலவினங்களின் கூட்டுத்தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. |

**1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | ரூபா 30,077,526 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலையில் குறிப்பிடப்பட்டுள்ள 2014 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 13,181,463 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 9,652,434 தொகையான இயந்திர உபகரணங்கள் ரூபா 7,243,629 தொகையான வாசிகசாலை புத்தகங்கள் உள்ளடங்களாக ரூபா 30,077,526 தொகையான நிலையான சொத்துக்களின் ஆரம்ப மீதியை உறுதிப்படுத்துவதற்கு அந்த சொத்துக்களை கொள்வனவு செய்த திகதி, கிரயம், சொத்தின் தன்மை உள்ளடங்களாக எந்தவொரு தகவலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 2016 ஆம் ஆண்டுக்காக காண்பிக்கப்பட்டுள்ள மீதியானது கடந்த வருடங்களின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கு முன்னர் நிறுவனத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த ஆரம்ப மீதிகளுக்கு உரியதாக நிலையான சொத்துக்கள் தொடர்பில் தனித்தனியாக பொருட்கள் அல்லது பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய மொத்த மீதி ஆரம்ப மீதியாக கருதப்பட்டு, அது முதல் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று சரியாக பேணப்பட்டுள்ளது என்பது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,241,680 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 21,762,788 ஆகும். அதன் பிரகாம் நிதி விளைவுகளில் ரூபா 9,521,108 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செலவினங்களின் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங்கண்டு ரூபா 280,125 தொகைக்கு 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 வரவேற்பறை கதிரைகள் (Lobby chairs) 2 வருடங்கள் கடந்திருந்த போதிலும், விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 30 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 39,296,925 தொகையான தளபாடங்களின் இருப்பொன்று அறிக்கையின் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயலிழந்தமை காரணமாக பழுதுபார்த்தல்களுக்கு களஞ்சியத்திற்க ஒப்படைக்கப்பட்டிருந்த 12 கணினிகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் பழுதுபார்க்கப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்கு, கட்டிடத்திற்கான பொருட்களை வாங்க ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து Wing A மற்றும் Wing B க்கு வரவேற்பறை கதிரைகள் (Lobby chairs) கொள்வனவு செய்யப்பட்டன. Wing B தற்போது வகுப்பறைகளை வைத்திருக்கும் கல்விக் கட்டிடத்தில் இவற்றில் சில பயன்படுத்தப்படுகின்றன. இந்த வரவேற்பறை கதிரைகளில் பெரும்பாலானவை Wing A நிர்வாக கட்டிடத்தின் தொடர்புடைய இடங்களில் நிறுவப்பட வேண்டும். ஆரம்ப ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டிடத்தின் கட்டுமானம் 2020 ஏப்ரல் 03 ஆந் திகதியன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டது, ஆனால் நாட்டில் Covid 19 மற்றும் பிற அடிப்படை சிக்கல்கள் காரணமாக, திட்டமிட்ட திகதியில் அதை நிறைவு செய்ய முடியவில்லை என்பது. | தேவையை கண்டறிந்து, அதிகபட்ச உற்பத்தித்திறனைப் பெறும் வகையில் நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தொடர்புடைய பணிகளுக்கு உபகரணங்களை உடனடியாகப் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 1992 இன் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 2ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு நிறுவனத்தினால் பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் பாடநெறிகளில் 20 சதவீதம் நிதியத்திற்கு வருடாந்தம் சேர்க்கப்படும். ரூபா 8,012,324 ஆன தொகை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01.2020 இன் 11 ஆம் பிரிவின் 7 ஆம் அத்தியாயத்தின் 7.1.4 ஆம் அபந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்த முடியுமானதாக இருந்த போதிலும், அந்த பணத்தில் ரூபா 3,452,202 தொகை அல்லது 43 சதவீதம் மாத்திரம் டிஜிட்டல் | நிதியத்தின் நிதியத்திலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் எஞ்சியுள்ள ரூபா 13,622,201 தொகையில் செலவினம் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் 2024 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் மூலம் தரச் சான்றுபடுத்தல், டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் இணையமயப்படுத்துவதற்காக ரூபா 17.528 மில்லியனான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த செலவினங்கள் நிறுவன நிதியத்தின் எஞ்சியுள்ள தொகைக்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டின் போது கட்டுப்பாட்டுச் சபையின் அறிவுரைக்கமைய பாடநெறிகளின் மிகை வருமானத்தில் நிலையான வைப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ரூபா 25 மில்லியன் பணத்திலும் | சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மற்றும் தரச் சான்றுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்தது. 2021 மற்றும் கடந்த வருடங்களில் முறையே பாடநெறி வருமானத்தில் ரூபா 3,767,251 மற்றும் ரூபா 465,529 தொகை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக பணம் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் மீதி ரூபா 13,622,201 வரையிலும் அதிகரித்து குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | செலவினம் மேற்கொள்ள நேர்ந்தது என்பது. | |
| (இ) | நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 10,600,000 மதிப்பீட்டு பெறுமதியுடைய களனி மாணவர் விடுதி 2020 யூன் மாதம் முதல் பயன்படுத்தப்பட்டு வந்த பொருட்களுட் உள்ளடங்களாக அறிக்கையின் திகதி வரையிலும் விளைவற்றதாக காணப்பட்டது. இந்த மாணவர் விடுதி பயன்பாடற்று காணப்பட்ட காலம் 03 வருடங்களை விஞ்சியிருந்ததுடன், இது முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் விடுதி சேதமடைந்தவாறு காணப்பட்ட போதிலும், முகாமைத்துவத்தினால் இந்த ஆதனங்கள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு, இராஜகிரியில் இருந்து சீதுவைக்கு நிறுவனம் மாற்றப்பட்டபோது, மாணவர்கள் களனியில் உள்ள விடுதியை விட்டு வெளியேறி சீதுவையைச் சுற்றி குடியேறினர். தங்கும் விடுதியை பராமரிப்பதற்கு அதிக செலவுகள் செய்ய வேண்டியிருந்ததாகவும், நிர்வாக சபையின் அறிவுறுத்தலின்படி, களனிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்குவதற்கு முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்ததோடு, அதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து வருவதாகவும் முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு மாணவர்களுக்கான தங்குமிடத்தைப் பெறுதல். ஆனால் இது குறித்து விசாரித்தும் நல்ல பதில் கிடைக்கவில்லை. 2024 ஏப்ரலில் நடைபெற்ற அந்த நிறுவனத்தின் நிர்வாகக் குழு, விடுதி குத்தகை அடிப்படையில் வேறொரு நிறுவனத்திற்கு வழங்கப்படும் என்று தெரிவித்தது. களனி விடுதியில் உள்ள சில பொருட்கள் பிரதான அலுவலகத்தின் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை. | தொடர்புடைய சொத்துக்கள் உடனடியாக ஆக்கபூர்வமான பணிகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். |